SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஜனவரி - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# ஜனவரி - 2018

## தமிழ்நாடு

1) கோயம்புத்தூரின் ஆர்.எஸ்.புரம் (B2) காவல் நிலையமானது இந்தியாவிலேயே மிகச்சிறந்த, நவீனமான காவல்நிலையங்களில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. சென்னை அண்ணா நகரில் உள்ள (K4) காவல் நிலையம் இந்திய அளவில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

2) தமிழ்நாடு அரசின் விருதுகள் - 2018 அறிவிப்பு :

- திருவள்ளுவர் விருது - கோ.பெரியண்ணன் (2018)
- தந்தை பெரியார் விருது - P.வளர்மதி
- அம்பேத்கர் விருது - முனைவர் K.J.ஜார்ஜ்
- காமராஜர் விருது - T.R.தினகரன்
- அண்ணா விருது - A.சுப்ரமணியன்
- பாரதியார் விருது - S.பாலசுப்ரமணியன் & பாரதிபாலன்
- பாரதிதாசன் விருது - K.ஜீவ பாரதி
- திரு.வி.க. விருது - வை.பாலகுமாரன்
- கி.ஆ.பெ.விஸ்வநாதன் விருது - P.மருதநாயகம்

(*இவற்றில் திருவள்ளுவர் விருதைத் தவிர மற்ற அனைத்தும் 2017-ம் ஆண்டுக்கான விருதுகள்)

3) ‘அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்’ ஜனவரி 22, 2018-ல் தொடங்கி வைக்கப்பட்டது:- இத்திட்டத்தின்படி 18-லிருந்து 40 வயதுக்குட்பட்ட பெண்கள் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கான தொகையில் 50 விழுக்காட்டை தமிழக அரசு மானியமாக வழங்கும்.

- மானியத் தொகையானது அதிகபட்சம் ரூ.25,000/- அல்லது வாகனத்தின் விலையில் 50% ஆக இருக்கும்.
- இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் பிப்ரவரி 5, 2018ஆக இருந்தது. பின்னர் அது பிப்ரவரி 10, 2018-ஆக நீட்டிக்கப்பட்டது.
- இறுதியாக பிப்ரவரி 24, 2018 அன்று இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது.

4) தமிழ்நாட்டில் திறந்தவெளியில் மலம் கழிப்பதை முற்றிலுமாக ஒழித்த முதல் மாவட்டமாக தூத்துக்குடி உருவெடுத்துள்ளது.

5) திருச்சிராப்பள்ளி அருவில் உள்ள ஸ்ரீரங்கம் ரெங்கநாதசுவாமி திருக்கோயில் யுனெஸ்கோவின் ‘அவார்ட் ஆஃப் மெரிட்’ (UNESCO Award of Merit) விருதினைப் பெற்றுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

6) தமிழக ஆளுநர் பன்வரிலால் புரோஹித் திருவையாறின் உலகப் புகழ் பெற்ற 171-வது தியாகராயர் இசை ஆராதனைத் திருவிழாவைத் தொடங்கி வைத்தார்.

7) **சார்லி-435:** கடற்கரையோர ரோந்துக் கப்பலான ‘சார்லி-435’ கிழக்கு கடற்கரைப் பிராந்தியத்தில் செனைன மற்றும் கன்னியாகுமரி பகுதிகளிக்கிடையே தனது பாதுகாப்புப் பணியைத் தொடங்கியது.

8) **தேசிய இளைஞர் விருது :** நாகர்கோவிலைச் சேர்ந்த மாஷா நசீம் என்பவர் தேசிய இளைஞர் விருதைப் பெற்றுள்ளார்.

9) உடன்குடி அனல்மின் நிலையமானது தூத்துக்குடி மாவட்டத்தில் தொடங்கப்பட உள்ளது.

10) தமிழக அரசின் 2023-ம் ஆண்டுக்கான தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் ‘மின் ஆளுகைக் கொள்கை - 2017’ வெளியிடப்பட்டது.

## தேசம்

1) பிரதம அமைச்சர் அலுவலகத்தின் வலைதளமான www.pmindia.gov.in-ல் அஸ்ஸாமி மற்றும் மணிப்புரி மொழிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்து 13 மொழிகள் இவ்வலைதளத்தில் உள்ளன.

2) இ சாம்வத் (e-Samad) எனும் வலைமுகப்பானது பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இதில் தன்னார்வு அமைப்புகள், சிவில் சமூகம் மற்றும் துறை சார்ந்த நபர்கள் பங்கு பெற்று ஆலோசனைகள் வழங்கலாம்.

3) **இ-மருத்துவமனை:** ஒடிசா மாநிலமானது திறன்மிக்க மற்றும் தடையற்ற மருத்துவச் சேவைகளை அளிப்பதற்காக ‘இ-மருத்துவனை மேலாண்மைத் தகவல் அமைப்பினை’ (OeHMIS) உருவாக்கியுள்ளது.

4) NARI - இணைய வலைமுகப்பானது பெண்களுக்கான அரசின் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் பற்றிய விவரங்களை எளிதில் அணுகித் தெரிந்து கொள்ள வழிவகை செய்கிறது.

5) அருணாச்சலப் பிரதேசம் இந்திய அளவில் ‘திறந்த வெளியில் மலம் கழித்தலை’ ஒழித்த 5-வது மாநிலம் எனும் பெருமையை அடைகிறது. மேலும், வடகிழக்கு மாநிலங்களில் சிக்கிமுக்கு அடுத்த இரண்டாவது மாநிலம் எனும் நிலையை எட்டியுள்ளது. இமாச்சலப் பிரதேசம், கேரளம் மற்றும் ஹரியானா ஆகியவை திறந்த வெளியில் மலம் கழித்தலை அழித்தொத்த பிற மாநிலங்களாகும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

6) 14.15 கி.மீ. நீளம் கொண்ட ஜோஜிலா சுரங்கப்பாதையானது - (Zojila Tunnel) ஜம்மு-காஷ்மீரில் தேசிய நெடுஞ்சாலை-14ல் (NH-14) அமைந்துள்ளது. இருவழி - இரு திசைச் சாலையான இது ஸ்ரீநகர் மற்றும் லே (Leh) பகுதிகளை இணைக்கும் ஒற்றைச் சுரங்கப்பாதையாகும்.

7) வெளிநாடு வாழ் இந்தியர்கள் நாளான 'பிரவசி பாரதிய திவாஸ்' சனவரி 9, 2018 அன்று சிங்கப்பூரில் கொண்டாடப்பட்டது. "தொன்மையான பாதை, புதிய பயணம் : திறன் வாய்ந்த இந்தியா-ஆசியான் கூட்டுறவில் புலம் பெயர்ந்தவர்களின் பங்கு" என்பது இவ்விழாவின் அடிக்கருத்தாகும்.

8) ஸ்வச் சர்வேக்ஷன் 2018 : 'இந்தூர்' இந்தியாவின் தூய்மைமிகு நகரமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி 13வது இடத்தில் உள்ளது.

9) **தூய்மை கங்கா திட்டம்** : கங்கைத் துப்புரவிற்கான தேசியத் திட்ட அமைப்பானது (National Mission for Clean Ganga) கங்கையைத் தூய்மைப் படுத்துவதற்கான ஐந்து திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

10) 18வது அகில இந்திய கொறடாக்கள் மாநாடு இராஜஸ்தான் மாநிலம், உதய்ப்பூரில் நடைபெற்றது.

11) **சாக்ஷாம் 2018** (Saksham 2018) : பெட்ரோலியப் பொருட்களைச் சேமித்தல் மற்றும் திறம்படக் கையாளுதல் தொடர்பான விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

12) வஜ்ர பிரஹார் என்பது இந்திய - அமெரிக்க (USA) சிறப்புப் படைகளின் கூட்டு இராணுவப் பயிற்சியாகும். இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சியாட்டில் மாகாணத்தில் நடைபெற்றது.

13) வின்பாக்ஸ் (VINBAX) என்பது மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூரில் நடைபெற்ற இந்திய-வியட்நாம் நாடுகளின் இருதரப்பு இராணுவக் கூட்டுப் பயிற்சியாகும்.

14) சாரெக்ஸ் (SARES) 2018 என்பது இந்திய மற்றும் ஜப்பான் கடலோரக் காவல் படைகளின் தேடுதல் மற்றும் மீட்புக்கான கூட்டுப் பயிற்சியாகும். இது வங்கக் கடலில் சென்னைக் கடல் பகுதியில் நடைபெற்றது.

15) **ஐ.என்.எஸ் கரன்ஜ் (INS Karanj)** : ஸ்கார்மின் வகை நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ் கரன்ஜ் இந்தியக் கடற்படையால் மசகான க்ப்பல் கட்டம் தளத்திலிருந்து செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. மஹாராஷ்டிராவின் மும்பையிலிருந்து நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பலில் மூன்றாவதாகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

16) **மிஹிர் (MIHIR)** : 6.8 பீட்டா ஃப்ளாப்புகளுடன் (Peta flops) இயங்கும் சூரக்கணினியான (Super Computer) மிஹிர் நொய்டாவிலுள்ள தேசிய மத்திய வரம்பு வானிலை முன்னறிவிப்பு மையத்தில் (NCMRWF) நிறுவப்பட்டுள்ளது. இது தீவிரமான காலநிலை நிகழ்வுகள், சுனாமி, சூறாவளிகள், நிலநடுக்கங்கள் போன்ற இயற்கைச் சீரழிவுகள் ஆகியவற்றை முன்கூட்டியே கண்டறிய உதவுகிறது.

17) **பிரத்யுஷ் (Pratyush) :** இது 6.8 பீட்டா ஃபிளாப்புகளுடன் இயங்கக் கூடிய உலகின் நான்காவது வேகமான சூரக்கணினி ஆகும். புனேயிலுள்ள IITM (Indian Institute of Tropical Meterology) - ஆல் வடிவமைக்கப்பட்ட இக்கணினி வானிலை மற்றும் காலநிலையியல் ஆராய்ச்சியில் முக்கியப்பங்கு வகிக்கிறது.

18) விலையில்லா இயற்கை விவசாயத் திட்டம் (Zero Budget Natural - Farming) இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கவும், இயற்கை விளைபொருட்களை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும் இமாச்சலப் பிரதேச அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது.

19) **ஸ்ரீ ஸ்வபிமான்** : பெண்களின் மாதவிடாய் கால ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தினைப் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்கம் கொண்ட திட்டமாகும்.

20) TARE - Teacher Assoicateshi for Research Excellence, Overseas Visiting Doctoral Fellowship, Distinguished Investigator Award (DIA). மற்றும் Augmenting writing skills for Articulating Research (AWSAR) எனும் நான்கு புதிய திட்டங்கள் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன.

21) சர்வதேச அணைப் பாதுகாப்பின் முதல் கருத்தரங்கு கேரளாவின் கோவளத்தில் நடைபெற்றது. மேலும், இதில் 'தர்ம செயலி' (DHARMA - **D**am **H**ealth **A**nd **R**ehabilitation **M**onitoring **A**pplication) அறிமுகப்படுத்தப்பட்டது.

22) சிறிதானியங்களுக்கான தேசிய ஆண்டாக 2018-னை மத்திய அரசு அறிவித்துள்ளது.

23) மகாராஷ்டிர அரசு கைவிடப்பட்டோருக்காக அரசு வேலைவாய்ப்பில் 1% இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

24) ஏழாவது ராஷ்ட்ரிய சமக்கிருத மஹோத்சவம் - 2018, கர்நாடகாவின் பெங்களூரு நகரத்தில் நடைபெற்றது.

25) உமேஷ் சின்ஹா குழு : இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அமைக்கப்பட்ட 14 நபர்கள் அடங்கிய குழு; வளர்ந்து வரும் சமூக ஊடகங்களைக் கருத்தில் கொண்டு

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

'மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951'-ன் பிரிவு 126-ல் மாற்றங்கள் கொண்டு வருவதைப் பற்றி ஆராய்கிறது.

26) தேசிய சைபர் குற்றவியல் ஒருங்கிணைப்பு மையம் (Indian Cyber Crime Coordination Centre - I4C) - உள்துறை அமைச்சகத்தால் புது தில்லியில் அமைக்கப்பட உள்ளது.

27) குடியா (Gudiya) ஹெல்ப்லைன் : பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தெரிவிக்க இமாச்சலப் பிரதேச அரசு 24 x 7 செயல்படும் இந்த ஹெல்ப்லைனை அறிமுகம் செய்துள்ளது.

28) இந்தியாவிலேயே மாற்றுத் திறனாளிகளுக்கான முதல் தேசியப் பூங்கா நெலங்கானாவின் ஐதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

29) பிளமிங்கோ திருவிழா : தமிழ்நாடு - ஆந்திரா எல்லையில் அமைந்துள்ள புலிகாட் ஏரி மற்றும் நீலப்பட்டு பறவைகள் சரணாலயத்தில் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

30) பட்டம் விடும் விழா : குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் சபர்மதி ஆற்றங்கரையில் 'சர்வதேசப் பட்டம் விடும் விழா' நடைபெற்றது.

31) குப்பைத் திருவிழா : இந்தியாவின் முதல் குப்பைத் திருவிழாவினை 'கச்ரா மஹோத்சவ்' எனும் பெயரில் சட்டீஸ்கரின் ராய்ப்பூர் மாநகராட்சி நிகழ்த்தியுள்ளது.

32) முஹாஃபிஸ் (Muhafiz) திட்டம் : ஜம்மு-காஷ்மீர் அரசு, அமைப்பு சாரா (Unorganized Workers) தொழிலாளர்களுக்கான சமூக-பொருளாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்ய இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

33) ஆம் ஆம்தி கட்சியின் 20 சட்ட மன்ற உறுப்பினர்கள் 'பிற ஆதாயம் தரும் பதவிகளை' விகிதத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

34) இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) ஆதார் தகவல்களைப் பாதுகாப்பதற்காக இரண்டடுக்கு பாதுகாப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. விர்ச்சுவல் அடையாளம் (Virtual ID) மற்றும் வரம்புக்குட்பட்ட KYC என்பன அந்தரங்க விடயங்களைப் பாதுகாக்கும் அந்த இரண்டடுக்கு ஆகும்.

35) உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பொறுப்பேற்கும் முதல் பெண் வழக்கறிஞர் என்ற பெருமையை 'இந்து மல்ஹோத்ரா' பெறுகிறார்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

36) தேசிய இளைஞர் விழா : சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு புது தில்லியில் 22வது தேசிய இளைஞர் விழா கொண்டாடப்பட்டது.

37) கொல்கத்தா இந்தியாவின் மிதக்கும் சந்தை கொண்ட முதல் மெட்ரோ நகரமாகிறது. இச்சந்தை கொல்கத்தாவின் 'பட்டுலி' ஏரியில் அமைந்துள்ளது.

38) மின்-சிகரெட்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை பீஹார் அரசு தடை செய்துள்ளது.

39) நாட்டிலேயே முதன் முறையாக ஹரியானா மாநிலம் 'உயர் ஆபத்து மகப்பேறு இணையவாயில்' (High Risk Pregnancy Portal)-ஐத் தொடங்கியுள்ளது.

40) பேருந்து மற்றும் மெட்ரோ ரயில் போக்குவரத்துக்கான 'பொதுவான பயண அட்டையை' நாட்டிலேயே முதன்முறையாக டெல்லி மாநகர் வழங்கியுள்ளது.

41) மஹாராஷ்டிரா அரசு பொதுத் திறன் கொள்கையை (Public Cloud Policy) இந்தியாவிலேயே வெளியிட்ட முதல் மாநிலமாகும்.

42) ஹரியானாவின் ஃபரிதாபாத் மாவட்டத்திலுள்ள பானக்பூர் கிராம் தினமும் காலை 8 மணிக்கு நாட்டுப் பண்ணைக் கேட்டபின் தங்கள் அன்றாட வாழ்க்கையைத் தொடங்கும் முடிவெடுத்துள்ளார். இந்தக் கிராமம் இந்தியாவிலேயே இப்பழக்கத்தைக் கடைப்பிடிக்கும் இரண்டாவது கிராமமாகும். தெலுங்கானாவின் கரீம் நகர் மாவட்டத்திலுள்ள 'ஜம்மிகுண்டா' கிராமம் இதன் முன்னோடியாகும்.

43) மத்திய அரசு மேற்கு வங்கத்தின் புதிய அதிகாரப்பூர்வ இலச்சினையை அங்கீகரித்துள்ளது. இந்த இலச்சினை அசோகர் துணையும் 'பிஸ்வா மங்களா' எனும் வாக்கியத்தையும் கொண்டுள்ளது.

44) ஜல் மார்க் விகாஸ் திட்டம் : தேசிய நீர்வழிப்பாதை - 1 (ஹல்தியா முதல் வாரணாசி வரையிலான 1380 கி.மீ. பாதை)-ல் வாணிபப் போக்குவரத்தைத் தொடங்குவதே இதன் நோக்கம். கங்கை நதியில் 1500 டன் தாங்குதிறன் கொண்ட வகையிலான போக்குவரத்தே இதன் மற்றொரு இலக்காகும்.

45) புதிய திவால் சட்ட முன் வரைவு (Insolvency and Banckruptcy Code Amendment, Bill - 2017 நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலையும் பெற்றது.

46) பிஹாரின் தோமியிலிருந்து மேற்கு வங்கத்தின் துர்காபூர் வரையிலான 400 கி.மீ. இயற்கை எரிவாயு குழாயினை அமைப்பதற்கு கெயில் நிறுவனம், பிரதான் மந்திரி உர்ஜா கங்கா திட்டத்தின் ஒப்பந்தம் செய்துள்ளது.

47) நாட்டிலேயே முதன் முறையாக நிலக்கரியிலிருந்து எரிவாயு எடுக்கும் ஆலையைக் கெயில் நிறுவனம் ஒடிசாவில் நிறுவியுள்ளது.

48) ராய்சீனா பேச்சுவார்த்தை : இது இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கைக்கான பெருமைமிகு மாநாடு ஆகும். மூன்றாவது உரையாடல் புது தில்லியில் ஜனவரி 16, 2018 அன்று நடைபெற்றது.

49) ஐ கிரியேட் (iCREATE) : தொழில்முனைவு மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மையம் அகமதாபாத்தில் ஆரம்பிக்கப்பட்ட இம்மையம் ‘தொடங்கிடு இந்தியா’ (Start-u India) திட்டத்தினை ஊக்குவிக்கும் வகையில் அமைந்ததாகும்.

50) பிரதான் மந்திரி சுரக்ஷித் மாத்ரித்வ அபியான் : கருவுற்ற பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஒன்பதாம் தேதியன்று இலவச மருத்துவப் பரிசோதனைகளை அளித்து அவர்களின் நலம் பேணுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பாதுகாப்பான குழந்தைப் பேறினை உறுதி செய்யும் வகையில் கிராம-நகர்ப்புறங்களில் அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

51) டெல்லி பிரகடனம் : புது தில்லியில் நடைபெற்ற 25-வது ஆசியான் மாநாட்டில் சனவரி 26, 2018 அன்று பிரகடனம் செய்யப்பட்டது. பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் தீவிரவாதத்தை அழித்தொழிப்பதற்கான பொதுவான அணுகுமுறையை இப்பிரகடனம் வலியுறுத்துகிறது.

52) 26-வது உலகப் புத்தகத் திருவிழா புது தில்லியில் நடைபெற்றது.

53) மும்பையிலுள்ள ‘மட்டுங்கா இரயில் நிலையம்’ நாட்டிலேயே முதன் முறையாக, முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் இரயில் நிலையமாகிறது.

54) தர்மா-தம்மா கருத்தரங்கு : சனவரி 12, 2018 அன்று பீஹாரின் நாளந்தா பல்கலைக் கழகத்தில் இதன் 4-வது மாநாடு நடைபெற்றது.

55) தேசிய குடும்ப மற்றும் ஆரோக்கியம் சார்ந்த ஆய்வறிக்கை (NFHS-4)ன் படி டெல்லி இந்தியாவின் செல்வச் செழிப்பான நகரமாகவும், சமண சமயத்தினர் செல்வச் செழிப்பான சமூகத்தினராகவும் அறியப் படுகின்றனர்.

56) அஃப்சல் அமனுல்லாஹ் குழு : இக்குழுவின் பரிந்துரையின் படி இந்த ஆண்டு முதல் ஹஜ் புனிதப் பயணத்துக்கான மானியம் ரத்து செய்யப்படுகிறது.

57) மலிமத் குழுவானது குற்றவியல் நீதி அமைப்பில் சீர்திருத்தங்கள் செய்வதற்காக அமைக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**Free State Level TNPSC Group II (OT) MOCK TEST on 4th November 2018 (Sunday)**
**Test Centres:** 1. Anna Nagar, 2. Adyar, 3. Salem, 4.Madurai, 5. Trichy, 6. Tirunelveli, 7. Cuddalore, 8. Vellore, 9. Thanjavur, 10. Kancheepuram, 11. Krishnagiri, 12. Erode, 13. Palani, 14. Coimbatore, 15. Namakkal

58) AMRIT (Affordable Medicine and Reliable Imlants for Treatment) திட்டமானது ஏழை மக்களின் புற்றுநோய் மற்றும் இதய நோய் போன்றவற்றைக் குணப்படுத்த வழிவகை செய்கிறது.

59) தேசிய மருத்துவ ஆணையத்திற்கான சட்டமுன் வரைவு, 2017 மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

60) திரிபுரா மாநிலத்தின் பாரம்பரிய சாங்க்ராய் (Sangrai) நடனம் குடியரசு தின அணி வகுப்பில் முதன்முறையாக இடம் பெற்றது,.

61) குடியரசு தின அணி வகுப்பில் சிறந்த ஒப்பனைக் கண்காட்சிக்கான விருது (Best Tableau) மஹாராஷ்டிரா மாநிலத்திற்கு வழங்கப்பட்டது.

62) தெலங்கானாவில் கோயா பழங்குடியினரால் கொண்டாடப்படும் மேடாரமின் சம்மக்கா-சரக்கா (அ) சரளம்மா ஜதாரா இவ்வாண்டின் தேசிய விழாவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

63) ஆபரேஷன் டிஜிட்டல் போர்ட் : கல்விக்கான அறிவுரை வழங்கும் மைய அமைப்பு (CABE) டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட வகுப்பறைகளை உருவாக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

64) இந்தியாவின் முதல் செய்தித் தாளான ‘பெங்கால் கெசட்’ தொடங்கப்பட்டு 238 ஆண்டுகள் நிறைவுற்றுள்ளது.

65) கேரளாவின் நிலம்பூர் தேக்கு புவிசார் குறியீட்டு அந்தஸ்தினைப் (GI TAG) பெறுகிறது.

66) 12வது உலகளாவிய கலைகள் மற்றும் கலைஞர்களுக்கான விழா புவனேஷ்வரில் நடைபெற்றது.

67) பேடிசும் பேமெண்ட் வங்கி (Paytm Payments Bank) இண்டஸ் இன்ட் (Indus Ind) வங்கியுடன் கூட்டுச் சேர்கிறது.

68) ரிலையன்ஸ் ஜியோ இன்ஃபோகாம் லிமிடெட் சொந்தமாக ‘Jio Coin’ எனும் கிரிப்டோகரன்சியைத் தொடங்கவுள்ளது.

69) கோரேகான் யுத்தத்தின் 200வது ஆண்டு நினைவு விழா மஹாராஷ்டிராவில் கொண்டாடப்பட்டது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

70) பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷ யோஜனா திட்டத்தின் கீழ் இமாச்சலப் பிரதேசத்தின் பிலாஸ்பூரில் புதிய எய்ம்ஸ் (AIIMS) பல்கலைக்கழகம் சனவரி 3, 2018 அன்று நிறுவப்பட்டது.

71) முக்கிய மந்திரி கலாகர் சஹாயதா யோஜனா திட்டத்தின் கீழ் ஒடிசா அரசு அம்மாநிலத்தின் இலக்கியம் மற்றும் கலாச்சாரம் சார்ந்து இயங்கும் ஆளுமைகளுக்கு நிதி உதவி அளிக்கிறது.

72) தனு யாத்ரா : இது உலகின் திறந்தவெளி திரைப்பட விழாக்களில் மிகப் பெரிய விழவாகும். இது ஒடிசாவில் நடைபெற்றது.

73) பிஹார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் வடக்கு கோயல் நீர்த்தேக்கத் திட்டம் தொடங்கப்பட்டது.

74) 'Imperfect' என்ற நூல் சஞ்சய் மஞ்ரேக்கர் (முன்னாள் கிரிக்கெட் வீரர்) அவர்களால் எழுதப்பட்டது.

75) கமலேஷ் படேல் 'The heartfulness way' எனும் நூலை எழுதியுள்ளார்.

76) "மஜூலி : வளங்களும் சவால்களும்" எனும் நூல் சஞ்சீப் குமார் போர்கோத்தி என்பவரால் எழுதப்பட்டு 'Authorspress' ஆல் பதிப்பிக்கப்பட்டது.

## சர்வதேசம்

1) சகோதரி மாநில ஒப்பந்தம் : பரஸ்பர வளம் மற்றும் வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்ட இந்த ஒப்பந்தம் ஆந்திரப் பிரதேச அரசுக்கும் சுவிட்சர்லாந்தின் ஜூரிச் மாகாணத்தின் கேன்டோனுக்கும் இடையில் போடப்பட்டது.

2) யுனெஸ்கோவின் உறுப்பினர் பதவியிலிருந்து இஸ்ரேல் விலகி வெளிவந்துவிட்டது.

3) முதன் முறையாக சவுதி அரேபியாவும் ஐக்கிய அரபு அரேகமும் மதிப்புக் கூட்டு வரியினை (VAT) அறிமுகம் செய்துள்ளன. இது பெரும்பாலான சரக்குகளுக்கு 5% ஆக இருக்கும்.

4) இந்தியப் பெருங்கடலுக்கும் தென் சீனக் கடலுக்கும் இடைப்பகுதியில் சீனா நீருக்கு அடியிலான கண்காணிப்பு வலைப்பின்னலை அமைந்துள்ளது.

5) துருக்கியின் அழிவின் விளிம்பிலுள்ள 'பறவை மொழியானது' யுனெஸ்கோ பட்டியலில் இணைந்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

6) உலகிலேயே முதன்முறையாக ஐஸ்லாந்து ஆண்-பெண் இரு பாலருக்கும் ஊதியத்தில் சம உரிமை என்பதை சட்டப்படியான உரிமையாக்கியுள்ளது.

7) ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அவையில் (UNSC) ஆறு நாடுகள் நிரந்தரமற்ற உறுப்பினர்களாச் சேர்ந்துள்ளனர். அவையாவன: குவைத், பெரு, போலாந்து, நெதர்லேண்ட்ஸ், ஐவரி கோஸ்ட் மற்றும் ஈகுவட்டோரியல் கினியா.

8) விக்கிலீக்ஸ் நிறுவனத் தலைவர் ஜுலியன் அசாஞ்சேவுக்கு ஈகுவடார் நாடு குடியுரிமை வழங்கியுள்ளது. இதற்கு முன் அவர் லண்டனில் ஐந்து வருடங்களுக்கும் மேல் தஞ்சமடைந்திருந்தார்.

9) உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின்னாலே தெற்கு ஆஸ்திரேலியாவின் போர்ட் அகஸ்டாவில் அமைக்கப்பட்டுள்ளது.

10) ஆங்கில மொழியை, ஈரான் தன்னுடைய நாட்டின் ஆரம்பப் பள்ளிகளில் தடை செய்துள்ளது.

11) இரும்புக்கை (Iron Fist) : அமெரிக்க மற்றும் ஜப்பானிய இராணுவப் படைகளின் கூட்டுப் பயிற்சியாகும்.

12) பனிப்புகைக் கோபுரம் (Smog Tower) : உலகிலேயே மிகப்பெரிய காற்றைச் சுத்திகரிக்கும் பனிப்புகைக் கோபுரத்தினை சீனா, அதன் சியான் (Xian) மாகாணத்தில் நிறுவுயுள்ளது.

13) மைத்ரி-2 : இது அகர்தலாவிலிருந்து கொல்கத்தாவிற்கு டாக்கா வழியாகச் செல்லும் இரண்டாவது பேருந்து சேவையாகும். மைத்ரி-1 பேருந்து சேவை 2015-ல் தொடங்கியது.

14) இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு இந்தியாவிற்கு வந்து சென்றார்.

15) தேசிய அறிவு வலைப்பின்னல் (National Knowledge Network) எனும் சார்க் நாடுகளின் அறிவு சார்ந்த அமைப்பில் இந்தியா, பாகிஸ்தானை இணைக்கவில்லை.

16) தனது ‘துருவ பட்டுப் பாதை’ (Polar Silk Route)-ல் ஆர்வம் காட்டி வரும் சீனா, தனது முதல் ஆர்க்டிக் கொள்கைக்கான வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

17) சிறப்புக் கண்காணிப்புப் பட்டியலில் (Special Watch List) பாகிஸ்தானை அமெரிக்கா சேர்த்துள்ளது. மேலும் அந்நாட்டுக்கான 1.15 பில்லியன் அமெரிக்க டாலர் இராணுவ உதவித் தொகையையும் கிடப்பில் போட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

18) சீனா தனது இரண்டாவது கடற்படை தளத்தைப் பாகிஸ்தானில் நிறுவுவதற்கான பரிசீலனையில் உள்ளது.

19) பனித் திருவிழா : சர்வதேச பனிக்கட்டித் திருவிழா சீனாவின் ஹார்மின் மாகாணத்தில் நடைபெற்றது. 34-வது முறையாக நடைபெறும் இவ்விழா உலகின் மிகப்பெரிய பனிவிழாவாகும்.

20) தீவிரவாதத்தைக் கட்டுக்குள் வைப்பதற்கான இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் இந்தியா மற்றும் இந்தோனேசியா இடையே புது தில்லியில் நடைபெற்றன.

21) சீனா, நேபாளத்தின் இரண்டாவது இணையச் சேவைகளை அளிப்பவராகியுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் இணையச் சேவை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

22) அமேசான் நிறுவனத்தின் செயல் தலைவராக ஜெஃப் பெசோஸ் உலகின் மிகப்பெரிய பணக்காரராக உருவெடுத்துள்ளார்.

## பொருளாதாரம்

1) அசோக் தல்வாய் குழு : விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதே இக்குழுவின் நோக்கமாகும்.

2) தேர்தல் நிதிப் பத்திரங்கள் : தேர்தல் நிதிக்காகப் பத்திரங்கள் வெளியிடும் முதல் நாடு இந்தியா ஆகும்.

3) விவசாயிகளின் வருவாய் இழப்பினை ஈடுகட்ட 'விலை குறைபாட்டுக் கட்டணம்' (Price Deficiency Payment) எனும் திட்டத்தினைப் பல மாநிலங்கள் பின்பற்றுகின்றன.

4) உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தில் (FSSAI) மேற்கொள்ளப்பட்ட செயல்பாடு சார்ந்த தணிக்கை அறிக்கையை தலைமைக் கணக்குத் தணிக்கையகம் (CAG) வெளியிட்டது.

5) இயற்கை விவசாய விளைபொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களுக்கான நிபந்தனைகள் மற்றும் விதிகளை FSSAI வெளியிட்டுள்ளது.

6) உள்ளடக்கிய வளர்ச்சிக் குறியீடு : உலகப் பொருளாதார மன்றத்தினால் (World Economic Forum) வெளியிடப்படும் இந்தக் குறியீடானது பொருளாதார நிலையில் வளர்ந்து வரும் நாடுகளைப் பட்டியலிடுகிறது. இதன் படி பட்டியலிடப்பட்ட 74 நாடுகளில் இந்தியா 62வது இடத்தில் உள்ளது. நார்வே முதல் இடத்தையும் மொசாம்பிக் கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

7) சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO) 2018ஆம் ஆண்டுக்கான உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம் பற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

8) இந்தியா, 180 நாடுகளுக்காக வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் (Environment Performance Index) 177வது இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் சுவிட்சர்லாந்து முதல் இடத்திலும் நோபாளம் கடைசி இடத்திலும் உள்ளன.

9) உலக உற்பத்திக் குறியீடு : உலகப் பொருளாதார மன்றத்தினால் (WEF) வெளியிடப்படும் இப்பட்டியலில் இந்தியா 30-வது இத்தில் உள்ளது; ஜப்பான் முதல் இடத்தில் உள்ளது.

10) உலகளாவிய திறமைகளுக்கான போட்டித்திறன் குறியீட்டினை (GTCI) இன்செட் (INSEAD) அடெக்கோ குழுமம் மற்றும் டாடா கம்யூனிகேஷன்ஸ் ஆகியவை சேர்ந்து வெளியிட்டுள்ளன.

11) GeM 3.0 : ஆன் லைன் சந்தைத் தளமான 'மின்-சந்தை இடம் 3.0' என்பதை அரசு செயல்படுத்தியுள்ளது. சரக்கு மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்வதற்கான எளிய வகையில் இத்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

12) சரக்கு மற்றும் சேவை வரிக்கான மின்-வழி ரசீது (GST e-Way Bill) என்பது மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் மூலம் GST-ன் கீழ் வரும் சரக்குகளின் கண்காணிப்பு எளிதாகிறது.

13) பசுமைப் பத்திரங்கள் : India INX (இந்தியாவின் சர்வதேச பங்குச் சந்தை), இந்திய ரயில்வே நிதி நிறுவனத்தின் (IRFC) பசுமைப் பத்திரங்களை முதன்முதலாக சர்வதேசப் பங்குச் சந்தையில் வெளியிட்டது.

14) ஆயகார் சேது செயலி (Aayakarsatu App) : வருமான வரித் துறையினரால் வெளியிடப்பட்ட இச்செயலியில் ஆன்லைன் உரையாடலுக்கான சேவை வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் www.incometaxindia.gov.in எனும் வலைதளம் திங்கள் முதல் வெள்ளிக் கிழமைகளில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையில் வரி செலுத்துபவர்கள் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

15) இந்தியாவுக்கு வரும் நேரடி அந்நிய முதலீட்டின் FDI பெரும்பகுதி மூல ஆதாரமாக மொரிஷியஸ் நாடு உள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

16) 7.75% சேமிப்புப் பத்திரங்கள் திட்டம் : இத்திட்டமானது மத்திய நிதி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பொதுமக்கள் இவ்வகையான வரி செலுத்துப் பத்திரங்களில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கிறது.

17) பண்டக செயல்திறன் குறியீட்டு அட்டவணை (LEADS)ல் குஜராத் மாநிலம் இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது.

18) பொருளாதார ஆய்வறிக்கை (2017-2018) : இது மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறையினால் வெளியிடப்படுகிறது. இதன்படி நடப்பு நிதி ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 6.5%ஆகவும் கடந்த ஆண்டுக்கு 7.1% ஆகவும் இருந்தது.

19) உலக எஃகு சங்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இந்தியா உலகின் மூன்றாவது பெரிய எஃகு உற்பத்தி செய்யும் நாடாக உருவெடுத்துள்ளது.

20) கல்விக்கான வருடாந்திர அறிக்கை, 2017 (Annual Status of Education Report), தன்னார்வ அமைப்பான பிரதிமினால் (Pratham) வெளியிடப்பட்டது..

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1) இஸ்ரோவின் 100வது செயற்கைக் கோள் : PSLV - C40/ கார்ட்டோ - சாட் 2 எனும் இந்தியாவின் 100வது செயற்கைக் கோளானது சனவரி 12, 2018 அன்று வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

2) மெகுல் கார்க் (Mehul Garg) எனும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் இங்கிலாந்தில் நடைபெற்ற 'மென்சா நுண்ணறிவுத் திறன் தேர்வில்' அதிக மதிப்பெண் பெற்றுள்ளார். இச்சாதனையைச் செய்யும் இவர் மிகவும் இளமையான வயதில் இதனை எட்டியுள்ளார்.

3) பந்திகூட் ரோபோ (Bandicoot Robot) : கேரளப் பொறியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ரோபோவானது மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் இழிவிலிருந்து தீர்வளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

4) ஹேப்பி நாரி அணையாடை வழங்கும் இயந்திரம் : நாட்டிலேயே முதன்முறையாக போபால் இரயில் நிலையத்தில் 'மாதவிடாய் காலத்தில் பெண்கள் அணியும் அணையாடை (சானிட்டரி நாப்கின்)' வழங்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

5) பார்க்கர் சூரியத் துழாவி : இது நாசா விஞ்ஞானிகளால் சூரியனின் வெளிப்புற வளிமண்டலத்தை ஆய்வு செய்யும் வகையில் செலுத்தப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

6) ஜூமா திட்டம் (Zuma Mission) : இது Space X நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் இரகசியத் திட்டமாகும்.

7) வேகமான இனப்பெருக்கத் தொழில்நுட்பம் : பயிர் உற்பத்தியினை மும்மடங்காகப் பெருக்கும் இவ்வகைத் தொழில்நுட்பத்தை உலகிலேயே முதன்முறையாக ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

8) இந்தியாவில் வயிற்றுப் போக்கினைக் குணப்படுத்தும் ரோட்டோவாக் தடுப்பூசி, உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தகுதித் தேர்வில் தேர்வடைந்துள்ளது.

9) இளஞ்சிவப்பு நிறக் காய்ப்புழுக்களின் தொற்றால் பருத்திப் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. குஜராத், மகாராஷ்டிரா, தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இத்தொற்றினால் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மாநிலங்களாகும்.

10) உலகின் முதல் தனியார் செயற்கைக்கோள் : அமெரிக்க விண்வெளி சார்ந்த 'ஸ்டார்ட்-அப்' நிறுவனமான 'ராக்கர் ஆய்வகம்', மூன்று சிறிய ரக செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவியுள்ளது. வெற்றிகரமான இந்நிகழ்வினை நியூசிலாந்தில் உள்ள தனது சொந்த ஏவுதளத்திலிருந்து செய்து காட்டியுள்ளது இந்நிறுவனம்.

11) குளோன் செய்யப்பட்ட குரங்கு : ஜோங் ஜோங் மற்றும் ஹீவா ஹீவா எனும் உருவொத்த, இரண்டு நீண்ட வால் குரங்குகளை சீன விஞ்ஞானிகள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர். குளோனிங் குரங்குகளை உருவாக்குவது உலகிலேயே இதுதான் முதன்முறை ஆகும்.

12) கருங் காய்ச்சல் அல்லது தம் தம் காய்ச்சல் என்று அழைக்கப்படும் காலா அசர் நோயினை முற்றிலும் அழிக்க வேண்டிய காலக்கெடுவான டிசம்பர், 2017-னை இந்தியா தவறவிட்டுள்ளது.

13) சனவரி 31-ம் தேதியன்று 'பெருஞ்சிவப்பு நீல நிலவு' (Super Blood Blue Moon) எனும் அரிய நிகழ்வு ஆசியா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, மத்தியக் கிழக்கு நாடுகள் மற்றும் வடமேற்கு அமெரிக்கப் பகுதிகளில் நிகழ்ந்தது.

14) சரஸ் PT1N என்பது அறிவியல் மற்றும் தொல்துறை ஆராய்ச்சி நிறுவனத்தின் தேசிய விமானவியல் ஆய்வகத்தினால் (CSIR - NAL) வடிவமைக்கப்பட்ட 14 இருக்கைகள் கொண்ட பயணிகள் விமானமாகும். தேசிய விமானவியல் ஆய்வகமானது பெங்களூருவில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாகும்.

15) ரிசோ (Rizhao) : இது சீனாவின் புதிதாக வடிவமைக்கப்பட்ட ஏவுகணை தாங்கிக் கப்பலாகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

16) SPT 0615 - JD எனும் புதிய அண்டமானது (Galaxy) நாசா விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளது. இது பேரண்டத்தின் மிக நீண்ட தொலைவில் அமைந்துள்ள அண்வெளியாகும்.

17) அக்னி - 5 : உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி - 5 ஏவுகணை ஒடிசாவிலுள்ள அப்துல்கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. தரை விட்டு தரைக்கு பாயும் இந்த ஏவுகணை மிக அதிக தொலைவு (long range) சென்று தாக்க வல்லது.

18) விண்வெளிக் குப்பைகளை அகற்றும் திட்டம் (Remove Debris Mission) : இங்கிலாந்து மற்றும் சர்ரே பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இணைந்து விண்வெளியில் சுற்றித் திரியும் குப்பை கூளங்களை (Debris) அகற்ற முடிவு செய்துள்ளன.

19) மும்பை கடற்படைக் கட்டுமான தளத்திலிருந்து ஐ.என்.எஸ் நிர்பிக், ஐ.என்.எஸ்.நிர்கத் ஆகிய கப்பல்கள் பணிக்காலம் முடிநது ஓய்வுக்குச் செல்கின்றன. இதில் INS நிர்பிக் 30 ஆண்டுகளும் INS நிர்கத் 28 ஆண்டுகளும் இந்தியக் கடற்படையில் சேவை புரிந்துள்ளன.

20) தரைவிட்டு வான் நோக்கிப் பாயும் இஸ்ரேலின் பராக் ஏவுகணையை இந்தியா வாங்கியுள்ளது.

21) கோல்டு மிஷன் (GOLD Misssion) வளிமண்டலத்தின் அயன மண்டலத்தினை ஆய்வு செய்வதற்காக நாசா GOLD (Global Scale Observations of the Limb and Disk) மிஷன் மற்றும் ICON எனும் Ionosperic Connection Explorer ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறது.

22) உலகின் ஐந்தாவது மிகப்பெரிய வைரமானது தென் ஆப்பிரிக்காவின் லீசோத்தோ சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது 910 காரட் வைரமாகும்.

23) ராம்தால் மரோலா திட்டம் : இது ஆசியாவிலேயே மிகப்பெரிய சொட்டு நீர்ப் பாசனத் திட்டமாகும். இஸ்ரேல் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய இத்திட்டம் 'கர்நாடகாவின் பாகல்கோட் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.'

24) '1926' ஹெல்ப்லைன் எண் : மகாராஷ்டிரா அரசு வனம் தொடர்பான அவசரத் தேவைகளுக்காக 24 x7 மணி நேரமும் இயங்கக் கூடிய '1926' ஹெல்ப்லைன் எண்ணை உருவாக்கியுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## சுற்றுச்சூழல்

1) மணிப்பூரின் உக்ருல் (Ukhrul) மற்றும் நாகாலாந்தின் டுயுன்சாங் (Tuensang) மாவட்டங்களில் இரு புதிய இஞ்சி இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

2) கோழிக் கோட்டில் உள்ள மலபார் வன உயிர் சரணாலயத்தில் மேவாசிங் இருள் தவளைகள் (நைக்டி பாட்ராசஸ் மேவாசிங்கி) எனும் புதிய வகைத் தவளைகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இவை மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே (endemic) காணப்படுபவையாகும்.

3) எல்ஸிஸ்மா ஜிரோயென்சிஸ் (Elcysma ziroensis) எனும் புதிய விட்டில் பூச்சி (Moth Species) இனம், அருணாச்சலப் பிரதேசம் ஜிரோ (ziro)-ல் உள்ள தால்லே வன உயிர் சரணாலயத்தில் (Talle) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

4) மேகாலயாவின் கிழக்கு ஜெயிந்தியா குன்றுகளில் உள்ள குகைகளில் Schistura larketensis எனும் குருட்டு மீன் இனங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

5) Roadkill செயலி : வனவாழ் உயிர்களின் மேம்பாட்டிற்காகச் செயல்படும் அரசு சாரா தொண்டு நிறுவனமான வன உயிர்ப் பாதுகாப்பு அறக்கட்டளை (Wildlife Conservation Trust) இச்செயலியை வெளியிட்டுள்ளது. வன உயிர்களின் இறப்பை, புவிக் குறியிடங்காட்டியோடு பிணைக்கப்பட்ட புகைப்படங்களாய் (Geo-tagged Photographs) பொது மன்றத்தில் பதிவேற்றம் செய்ய இச்செயலி உதவுகிறது.

6) அவா சூறாவளி : இது தென்மேற்கு இந்தியப் பெருங்கடலில் மடகாஸ்கரில் தோன்றிய சூறாவளியாகும்.

7) கேரளாவின் கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நான்கு புதிய வகை பால்சம் இனங்களை அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் கண்டறிந்துள்ளனர்.

## நியமனங்கள், ஆளுமைகள் மற்றும் விருதுகள்

1) மத்தியப் பிரதேசத்தின் ஆளுநராக ஆனந்தி பென் படேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

2) விஜய் கேசவ் கோகலே புதிய வெளியுறவுச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

3) ராஜிந்தர் கண்ணா, புதிய தேசியப் பாதுகாப்புத் துணை ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ளார். இவர் இந்தியாவின் அயலக நுண்ணறிவு முகமையான

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

'ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் (RAW) புலனாய்வுப் பிரிவின்' முன்னாள் தலைவர் ஆவார்.

4) தமிழ்நாட்டைச் சேர்ந்த K.சிவன் இஸ்ரோவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன் A.S.கிரண்குமார் இப்பதவியை வகித்தார்.

5) திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக S.சோம்நாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

6) இஸ்ரோவின் 'திரவ உந்துதல் அமைப்பு மையத்தின்' இயக்குநராக Dr.V.நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார். இம்மையமானது திருவனந்தபுரத்தின் வலியமாலாவில் உள்ளது.

7) பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டிருந்த முதல் சீக்கியப் பெண் பிரீத் கவுர் கில் ஆவார். இவர் நிழல் கேபினட்டின் உறுப்பினராகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளார். இப்பெருமையை அடையக் காரணமாக இருந்தவர் எதிர்க்கட்சித் தலைவரான ஜெரெமி கார்பைன் (Jeremy Corbyn) ஆவார்.

8) தேசியப் பாதுகாப்பு காவலகத்தின் (National Secuity Guard) புதிய இயக்குநர் ஜெனரலாக சுதீப் லக்தாஜியா நியமிக்கப்பட்டுள்ளார்.

9) ஓம் பிரகாஷ் ராவத் 22-வது இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையராக சனவரி 23, 2018 அன்று நியமிக்கப்பட்டார்.

10) 'அசோக் லவாசா' புதிய தேர்தல் ஆணையர்களின் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

11) இந்தியப் பொருளாதார சங்கத்தின் (Indian Economic Assoication) தலைவராக G.விஸ்வநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

12) உயிர்-வேதியியல் துறையில் நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இந்தியரான ஹர் கோவிந்த் கொரானாவின் 96-வது பிறந்த தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் கூகுள் நிறுவனம் டூடுள் (Doodle) வெளியிட்டு கவுரவித்துள்ளது.

13) ஏ.ஆர்.ரஹ்மான் சிக்கிம் மாநிலத்தின் சுற்றுலாவுக்கான விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

14) 'ஸ்வச் ஆதத் ஸ்வச் பாரத்' திட்டத்தின் தூதராக நடிகை கஜோல் நியமிக்கப்பட்டுள்ளார்.

15) தென் கொரியாவின் மியாங்சாங் மாகாணத்தில் 23-வது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் பங்குபெறும் இந்தியத் தடகள வீரர்களுக்கு ஹர்ஜிந்தர் சிங் தலைமைப் பொறுப்பு வகித்தார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

16) கேரள அரசின் பெருமைமிகு விருதான நிஷாகாந்தி புரஸ்கரம் (Nishagandhi Puraskaram) விருதினை தனஞ்செயன் - சாந்தா தனஞ்செயன் இணையினர் பெற்றுள்ளனர். இவ்விருது நடனக் கலைக்காக வழங்கப்படுகிறது.

17) தமிழகத்தில் இருந்து பத்ம விருதுகள் வாங்கியோர் :

- பத்ம விபூஷன் - இளையராஜா (கலை & இசை)
- பத்ம பூஷன் - ராமச்சந்திரன் நாகசாமி (தொல்லியல் துறை)
- பத்ம ஸ்ரீ - V.நாணம்மாள் (யோகா)
  - விஜயலஷ்மி நவநீத கிருஷ்ணன் (கிராமியப் பாடல்கள்)
  - ராஜகோபாலன் வாசுதேவன் (அறிவியல் & தொழில்நுட்பம்)
  - ரோமுலஸ் விட்டேக்கர் (வன உயிர்ப் பாதுகாப்பு)

18) இந்தியாவின் உயரிய இராணுவ விருதான அசோக் சக்ரா விருது, மரணம் அடைந்த இந்திய வான் படையின் கார்போரல் ஜோதி பிரகாஷ் நிரலாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

19) சங்கீத நாடக அகாடமியின் 2016-க்கான விருது கீதா சந்திரனுக்கு வழங்கப்பட்டது. இவர் பரத நாட்டியத்தில் சிறந்த புலமை பெற்றவர்.

20) ஜ்யோஸ்னா ஜெகந்நாதன் (பரத நாட்டியம், சங்கீத நாடக அகாடமியின் யுவ புரஸ்கார் விருதினைப் (2016) பெற்றுள்ளார்.

21) பாடகர் ஆஷா போஸ்லே 2018-ம் ஆண்டுக்கான யாஷ் சோப்ரா நினைவு விருதினை பெறுகிறார்.

22) வங்க நடிகரான சௌமித்ரா சாட்டர்ஜி பிரான்சின் உயரிய விருதான 'Legion d' Honneur' - ஐப் பெறுகிறார்.

23) இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 'பிரதீபா லஷ்மன் காய்' 'டேம் ஹீட்' (Dame hood) விருதினைப் பெற்றார். இதனை இங்கிலாந்து ராணி எலிசபெத் வழங்கிச் சிறப்பித்தார்.

24) தமிழக எழுத்தாளரான மாலன் நாராயணனுக்கு 2018-ம் ஆண்டுக்கான 'பாரதீய பாஷா பரிஷத்' விருது வழங்கப்பட்டுள்ளது.

25) நாரா லோகேஷ் அவர்களுக்கு 2018-ம் ஆண்டுக்கான 'டாக்டர் கலாம் புத்தாக்க ஆளுகை' விருது வழங்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

26) ஒடிசாவிலுள்ள மங்களாஜோதி சூழியல் சுற்றுலா அறக்கட்டளை சுற்றுலாவில் புத்தாக்கம் செய்ததற்கான ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா நிறுவனத்தின் (UN WTO) விருது வழங்கப்பட்டுள்ளது.

27) 2013-2017க்கான சிறந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

- 2013- Dr.நஜ்மா ஹெப்துல்லா
- 2014- ஹீக்கும்தேவ் நாராயண் யாதவ்
- 2015- குலாம் நமி ஆசாத்
- 2016- தினேஷ் திரிவேதி
- 2017- பத்ருஹரி மஹாதப்

28) பொது வாழ்வில் நேர்மையைக் கடைபிடித்தற்காக வழங்கப்படும் முஃப்தி முகமது சையது விருது முதன் முறையாக பிகார் முதல்வர் நிதிஷ் குமாருக்கு வழங்கப்பட்டது.

29) உலக சுகாதார நிறுவனத்தின் இஷான் டோக்ராமாசி குடும்ப நல விருது (Ihsan Dogramaci) வினோத் பால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் இவ்விருதினைப் பெறும் முதல் இந்தியர் ஆவார்.

## விளையாட்டு

1) **2022 தேசிய விளையாட்டுப் போட்டிகள் :** மேகாலயா 39-வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் ஒப்பந்தத்தில் இந்திய ஒலிம்பிக் சங்கம், மேகாலய மாநில ஒலிம்பிக் சங்கம் ஆகியவற்றுடன் கையெழுத்திட்டுள்ளது. எனவே 2022-ல் தேசிய விளையாட்டுப் போட்டிகள் மேகாலயா மாநிலத்தில் நடைபெற இருக்கின்றன.

2) கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் புது தில்லியில் பள்ளிகளுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

3) **பேபி ஒலிம்பிக்ஸ் :** இரண்டு முதல் நான்கு வயதுக் குழந்தைகளிடையே, முதன் முறையாக நடைபெற இருக்கும் 'பேபி ஒலிம்பிக்ஸ்' போட்டிகளை பஹ்ரைன் நடத்தித்தர இருக்கிறது.

4) ஆன்ச்சல் தாக்கூர் (Aanchal Thakur) வான்வெளிப் பறத்தலின் (Skiing) சர்வதேசப் போட்டியில் வெண்கலப் பதக்கம் (Bronze Medal) வென்றுள்ளார். இவர் பறத்தலில் சர்வதேச விருது பெறும் முதல் இந்திய வீரர் ஆவார்.

5) **கிரிக்கெட் ரஞ்சிக் கோப்பை 2017 :** மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் நடைபெற்ற இறுதிப்போட்டியின் டெல்லிக்கு எதிரான ஆட்டத்தில் விதர்பா அணி வெற்றி பெற்றது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

6) மகாராஷ்டிரா ஓபன் - 2018 : இத்தொடரின் இறுதிப் போட்டியில் தென் ஆப்பிரிக்காவின் கெவின் ஆண்டர்சனை எதிர்த்து பிரான்சின் கில்ஸ் சைமன் வெற்றி பெற்றார்.

7) சர் கார்ஃபீல்டு சோபர்ஸ் கோப்பை வழங்கும் இந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதினை விராட் கோலி பெற்றுள்ளார்.

8) 'ஸ்டீவ் ஸ்மித்' ஐசிசி டெஸ்ட் போட்டிக்கான இந்த ஆண்டின் சிறந்த வீரராகத தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

9) இந்த ஆண்டின் ஐசிசியின் சிறந்த ஒரு நாள் போட்டிக்கான சிறந்த வீரராக விராட் கோலி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

10) பார்வையற்றோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை 2018 : ஷார்ஜா (UAE) வில் நடைபெற்ற இத்தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.

**11) ஆஸ்திரேலிய ஓபன் - 2018 :**

**ஆடவர் பிரிவு :** குரோஷியாவின் 'மெரின் சிலிக்'கிற்கு எதிரான இறுதிப் போட்டியில் ரோஜர் பெடரர் பட்டம் வென்றார். இது இவரின் 20-வது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். மேலும் இது 6-வது ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

**மகளிர் பிரிவு :** கரோலின் வோஸ்னியாக்கி - டென்மார்க்

(வெற்றியாளர்)

எதிர்

சிமோனா ஹாலெப் (ரோமானியா)

(இரண்டாம் இடம்)

**12) பிரிமியர் பேட்மிண்டன் லீக் 2017-2018 :**

- ஹைதராபாத் ஹன்டர்ஸ் எதிர் பெங்களூரு பிளாஸ்டர்ஸ்
  (வெற்றி) (இரண்டாம் இடம்)

13) ஹாஃப்மேன் கோப்பை 2018 : சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரல் மற்றும் பெலிண்டா பென்சிக் ஜெர்மனிக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்று இக்கோப்பையைக் கைப்பற்றினர்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## முக்கியமான தினங்கள்

| நாள் | நிகழ்வுகள் | இலக்கு/முக்கியத்துவம் |
|---|---|---|
| சனவரி 1 | சத்யேந்திரநாத் தாகூரின் 125வது பிறந்த தினம் | போசான் துகள் கண்டுபிடிப்பு |
| சனவரி 5 | 1. குருகோவிந்த் சிங் ஜெயந்தி<br>2. தேசியப் பறவைகள் தினம் | 1. பத்தாவது சீக்கிய குருவைக் கவுரவித்தல்<br>2. பறவைகள் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குதல் |
| சனவரி 9 | பிரவசி பாரதிய திவாஸ்/வெளிநாடு வாழ் இந்தியர் தினம் | "புதிய இந்தியாவை உருவாக்குவதில் இந்திய வம்சாவளியினரின் பங்கு" |
| சனவரி 10 | உலக இந்தி தினம் | "இந்தி மொழியின் பெருமையை உலகறியச் செய்தல்" |
| சனவரி 11 | லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் நினைவு தினம் | இவர் இந்தியாவின் இரண்டாவது பிரதம அமைச்சராவார். |
| சனவரி 12 | தேசிய இளைஞர்கள் தினம் / யுவா திவாஸ் | சுவாமி விவேகானந்தரின் 155வது பிறந்த தினம் அனுசரிக்கப்பட்டது. |
| சனவரி 15 | தேசிய இராணுவ தினம் | தேசத்தைக் காப்பதற்காகப் பாடுபடும் இராணுவ வீரர்களைப் பெருமைப்படுத்த இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| சனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்த தினம் | இந்திய தேசிய இராணுவத்தைக் கட்டி எழுப்பியவர் |
| சனவரி 24 | தேசிய பெண் குழந்தைகள் தினம் | "பெண் என்பவள் மலர், முள் அல்ல" |
| சனவரி 25 | தேசிய வாக்காளர் தினம் | "அணுகத்தக்க தேர்தல்கள் 8-வது ஆண்டு விழா" |
| சனவரி 26 | 1. இந்தியக் குடியரசு தினம்<br>2. சர்வதேச சுங்க தினம் | 1. ஆசியான் நாடுகளின் 10 தலைவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.<br>2. "பொருளாதார வளர்ச்சிக்கான பாதுகாப்பான வர்த்தச் சூழல்" |
| சனவரி 28 | லாலா லஜபதிராய் அவர்களின் பிறந்த தினம் | "பஞ்சாப் சிங்கம்" என்று அழைக்கப் பட்டவர் |
| சனவரி 29 | இந்தியாவின் முதல் செய்தித்தாளான 'பெங்கால் கெசட்' வெளி வந்த 238-வது | ஹிக்கி என்பவரால் கொல்கத்தாவில் இந்த செய்தித் தாளானது ஆங்கில மொழியில் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| | வருடம் | ஆரம்பிக்கப்பட்டது. |
| சனவரி 30 | 1. தியாகிகள் தினம்<br><br>2. தேசிய சுகாதார தினம்<br><br>3. உலக தொழுநோய் ஒழிப்பு தினம் | 1. காந்தியடிகளை, கோட்சே 1948-ல் சுட்டுக் கொன்ற நாள்<br>2. வீடு, அலுவலகம், சாலைகள், பொது இடங்கள் என அனைத்துப் பகுதிகளிலும் சுகாதாரத்துக்கான உயர்ந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதை இந்த தேசிய சுகாதார தினம் ஊக்குவிக்கிறது.<br>3. குழந்தைகளில் தொழு நோய் சம்மபந்தப்பட்ட அனைத்துக் குறைபாடுகளையும் முற்றிலுமாக நீக்குவதை இந்த தினம் ஊக்குவிக்கிறது. |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS